Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 01.08.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 01.08.2026 – சனிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

பொதுத் தேர்வுகள் சட்ட திருத்த மசோதா- 2026-க்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் சிவில் விமானப் போக்குவரத்து துறை பிரமாண்ட வளர்ச்சி அடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தொன்மையான தமிழ் கலாச்சாரத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வென்ற வீரர்களுக்கு குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

*திரௌபதி முர்மு -1 (04)*

பொதுத் தேர்வுகள் சட்ட திருத்த மசோதா 2026-க்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார். இந்த மசோதா கடந்த வியாழக்கிழமை அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது குறித்த கூடுதல் தகவல்கள்... (வாய்ஸ்)

*திரௌபதி முர்மு -2 வாய்ஸ் (16)*

(வாய்ஸ்)

பொதுத் தேர்வுகள் சட்ட திருத்த மசோதா 2026-இல், கடுமையான தண்டனைகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும், விரைவு நீதிமன்றங்களை நிறுவுவதன் மூலமும் பொதுத் தேர்வுகளில் நடைபெறும் முறைகேடுகளைத் தடுப்பதை இந்தச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில், ஒரு வலுவான சட்டக் கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் தேர்வு முறையில் வெளிப்படைத்தன்மை, நேர்மை மற்றும் ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த சட்டம், பத்து ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை, பத்து கோடி ரூபாய் வரை அபராதம் மற்றும் குற்றவாளிகளுக்குச் சொந்தமான சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் போன்ற கடுமையான தண்டனைகள் உள்ளிட்ட பல முக்கிய விதிகளைக் கொண்டுள்ளது. வழக்குகளை விரைவாக முடிப்பதை உறுதி செய்வதற்காக, ஒவ்வொரு மாநில அரசும் மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகமும் அன்றாட விசாரணைகளுக்காக சிறப்பு விரைவு நீதிமன்றங்களை நிறுவ வேண்டும் என இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது.

*நிர்மலா சீதாராமன் (09 )*

தொன்மையான தமிழ் கலாச்சாராத்தை பாதுகாத்து பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார். சென்னையில் பன்னிரு திருமுறைகள், திருச்செந்தூர் தல புராணம் தொடர்பான புத்தக வெளியீட்டு விழாவில் இன்று உரையாற்றிய அவர், இலக்கியத்தின் வளத்தை செறிவூட்ட தமிழ் மொழியால் இயலும் என்று குறிப்பிட்டார். பழங்காலங்களில் தமிழர்கள் பின்பற்றிய சைவ மரபுகளை இப்புத்தகங்கள் வெளிப்படுத்துவதாகவும், இளையோர் இதனைப் படித்து நம் பண்டைய கலாச்சாரங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

*நரேந்திர மோடி -1 (19)*

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் சிவில் விமானப் போக்குவரத்து துறை பிரமாண்ட வளர்ச்சி அடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார். ஆந்திர மாநிலம், விஜயநகர மாவட்டம், போகாபுரத்தில் 5 ஆயிரத்து 640 கோடி ரூபாய் மதிப்பிலான பல்துறை திட்டங்களை இன்று தொடக்கி வைத்து பிரதமர் உரையாற்றினார். 2014ஆம் ஆண்டு 74 விமான நிலையங்கள் மட்டுமே செயல்பாட்டில் இருந்ததாக சுட்டிக்காட்டிய பிரதமர், தற்போது அது 166ஆக உயர்ந்துள்ளதாக கூறினார். பெருநகரங்களில் மட்டுமே இருந்த விமானப்

போக்குவரத்து வசதி, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஆட்சியில் சிறிய நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார். இதனால் சாமானிய மக்களும் தற்போது விமானப் பயணங்களை மேற்கொள்வதாக பிரதமர் கூறினார். இன்று தொடங்கப்பட்ட இந்த விமான நிலையம், ஆண்டுக்கு 60 லட்சம் பயணிகளைக் கையாளும் திறன் கொண்டது. செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான அமைப்புகள், பயோமெட்ரிக் செயலாக்கம் உள்ளிட்ட நவீன வசதிகள் இதில் உள்ளன. இந்நிகழ்ச்சியில் பிரதமரின் உரை குறித்த கூடுதல் தகவல்கள்… (வாய்ஸ்)

*நரேந்திர மோடி -2 வாய்ஸ் (16)*

(வாய்ஸ்)

ஆந்திர பிரதேசம் அதிவேகமாக முன்னேறி வருவதாகவும், பெரிய அளவிலான உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறை மேம்பாட்டின் மூலம், ஸ்வர்ண ஆந்திரா மற்றும் விக்சித் பாரத் ஆகிய தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில் மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று கலந்து கொண்ட நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் தெரிவித்தார். மேலும், புதிய விமான நிலையத்தை ஆந்திர பிரதேசம் குறிப்பாக வட ஆந்திராவின் வளர்ச்சிக்கான ஓடுபாதை என்றும், மாநில இளைஞர்களின் கனவுகளுக்கான ஒரு ஏவுதளம் என்றும், திரு. மோடி வர்ணித்தார். இந்த விமான நிலையத்திற்கு சுதந்திர போராட்ட வீரர் அல்லூரி சீதாராம ராஜுவின் பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும், இந்த

பெயர் வருங்கால சந்ததியினருக்கு தேசபக்தி மற்றும் பொதுச் சேவை உணர்வை ஊக்குவிக்கும் என்றும் அவர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் ஆந்திர மாநில முதலமைச்சர் திரு.என்.சந்திரபாபு நாயுடு மற்றும் மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. கே. ராம்மோகன் நாயுடு ஆகியோர் இந்த விமான நிலையத்தின் முக்கிய அம்சங்களை பிரதமரிடம் எடுத்துரைத்தார்.

*தாய்ப்பால் வார விழா (03)*

உலக தாய்ப்பால் வார விழா இன்று முதல் வரும் 7ஆம் தேதி வரை கடைபிடிக்கப்படுகிறது. நிலையான ஆரோக்கியத்திற்கு தாய்ப்பால் என்பதை வலியுறுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் நாடு முழுவதும் நடைபெறுகின்றன.

*அமித்ஷா (11)*

மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.அமித்ஷா, இரண்டு நாள் பயணமாக நேற்று புனே சென்றுள்ளார். அங்கு இன்று நடைபெற்ற விழாவில், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு.அஜித் தோவலுக்கு, லோக்மான்ய திலக் நினைவு தேசிய விருதை அவர் வழங்கினார். இந்த நாள், சுதந்திரப் போராட்ட வீரர் லோக்மான்ய பாலகங்காதர திலக்கின் நினைவு நாளையும், சமூக சீர்திருத்தவாதி லோகஷாஹிர் அன்னபாவு சாத்தேவின் பிறந்த நாளையும் குறிக்கிறது.

இந்த நிகழ்வுகளை நினைவுகூரும் வகையில் மகாராஷ்டிரா முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து திரு.அமித்ஷா, அன்னபாவு சாத்தேவின் நினைவிடத்தில் மலர் அஞ்சலி செலுத்துகிறார்.

*சரக்கு மற்றும் சேவை வரி (10)*

நாட்டில் சென்ற மாதம் 2 லட்சத்து 11 ஆயிரத்து 205 கோடி ரூபாய் சரக்கு மற்றும் சேவை வரி வசூலானதாக மத்திய நிதியமைச்சகம் கூறியுள்ளது. இது சென்ற ஆண்டு இதே காலகட்டத்தை ஒப்பிடுகையில் 15.4 சதவிகிதம் அதிகம் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. உள்நாட்டு உற்பத்தி வருவாய் 1 லட்சத்து 44 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளதாகவும், இது 10.1 சதவிகிதம் அதிகம் என்றும் அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது. இறக்குமதிகள் மூலம் கிடைக்கப்பட்ட சரக்கு மற்றும் சேவை வரி 28.8 சதவிகிதம் கூடுதலாகும் என்று கூறியுள்ள அமைச்சகம், இதன் மூலம் ஒட்டு மொத்த ஜுலை மாத சரக்கு சேவை வரி உயர்ந்துள்ளதாகவும் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

*காமன் வெல்த் (18)*

கிளாஸ்கோவில் நடைபெறும் காமன் வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் குத்துச்சண்டைப் பிரிவில் ஒலிம்பிக் வீராங்கனை லவ்லீனா தலைமையில் 10 இந்திய வீரர், வீராங்கனைகள் இறுதிப் போட்டிகளில்

இன்று களமிறங்குகின்றனர். அரையிறுதிப் போட்டியில் நேற்று பதக்கங்கள் வென்ற இந்த 10 வீரர்களின் மூலம் வெள்ளிப்பதக்கங்கள் நமக்கு உறுதியாகியுள்ள அதே வேளையில் நடப்பு காமன்வெல்த் போட்டிகளில் இந்திய வீரர் வீராங்கனைகள் சிறப்பான விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் டெகாத்லான் பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்ற தடகள வீரர் தேஜஸ்வின் சங்கருக்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். மேலும், இந்தியா நேற்று சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஜூடோவில் 2 வரலாற்றுச் சிறப்பு மிக்க தங்கப்பதக்கங்களை வென்றதுடன், ஆடவர் ஈட்டி எறிதலில் மறக்க முடியாத இரட்டை மேடை வெற்றியை பதிவு செய்து டெகாத்லானில் முதல் முறையாக வெண்கலப்பதக்கத்தை வென்றது. மேலும், தடகள போட்டிகளில் ஒலிம்பிக் சாம்பியனான நீரஜ் சோப்ரா ஆடவர் ஈட்டி எறிதல் பிரிவில் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

*விக்சித் பாரத் சங்கல்ப் அபியான் -1 (20)*

பிரதமர் நரேந்திர மோடி நாளை காணொளிக் காட்சி மூலம் 'விக்சித் பாரத் சங்கல்ப் அபியான்' திட்டத்திற்கான 'நஷா முக்த் யுவ' திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார். இந்தத் தொடக்க விழா, போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான 100 வார கால நாடு தழுவிய 'ஜன் பாகிதாரி'

பிரச்சாரத்தின் தொடக்கத்தைக் குறிக்கும். நாடு முழுவதும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் இருந்து இளைஞர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பார்கள். 'மை பாரத்' தன்னார்வலர்கள், 'மை பாரத்' தேசிய சேவைத் திட்டத் தன்னார்வலர்கள், இளைஞர் மன்றங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தொழில் சங்கங்களின் இளைஞர் பிரிவுகள் மற்றும் 125-க்கும் மேற்பட்ட கூட்டாளர் ஆன்மீக அமைப்புகளும் இந்த நிகழ்ச்சியில் காணொளி வாயிலாக இணைகின்றனர். இந்தப் பிரச்சாரத்தின் கீழ், போதைப்பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவதில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், பொதுமக்களின் பங்கேற்பை ஊக்குவிக்கவும், நாடு முழுவதும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வாராந்திர நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் விளையாட்டுப் போட்டிகள், நடைப் பயணங்கள், தியான அமர்வுகள், கலாச்சார நிகழ்ச்சிகள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், தெரு நாடகங்கள், கலந்துரையாடல் மன்றங்கள், கலைப் போட்டிகள் மற்றும் சமூக ஈடுபாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவை அடங்கும்.

*விக்சித் பாரத் சங்கல்ப் அபியான் - 2 (04 )*

இளைஞர்களை போதைப்பொருள் பயன்பாட்டிலிருந்து விலகி இருக்க ஊக்குவிப்பதும், தங்கள் சமூகங்களில் நேர்மறையான சமூக மாற்றத்திற்கான தூதுவர்களாக மாற அவர்களை ஊக்கப்படுத்துவதும் இந்த முயற்சியின் நோக்கமாகும்.

*விளையாட்டு (10)*

தைபே ஓபன் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் தன்வி ஷர்மா இன்று நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அபார வெற்றி பெற்று மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். 17 வயதான இவர், சீன தைபேயின் ஹுவாங் யூ-ஹ்சுனை 21-17, 21-11 என்ற நேர் செட்களில் வீழ்த்தி, இறுதிப் போட்டியில் தனது இடத்தை உறுதி செய்தார். தன்வி இப்போது இறுதிப் போட்டியில், உலகத் தரவரிசையில் 21-வது இடத்தில் உள்ள வியட்நாமின் துய் லின் நுயெனை எதிர்கொள்வார். இருப்பினும், உன்னதி ஹூடா அரையிறுதி ஆட்டத்தில் துய் லின் நுயெனிடம் 15-21, 18-21 என்ற செட் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறினார்.

*வானிலை (06)*

தமிழக கடலோரப் பகுதிகளில் கீழ்மட்ட வளி மண்டலத்தில் ஒரு காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதால், இன்று முதல் அடுத்த 2 நாட்களுக்கு மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் லேசான மழை பெய்யக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பொதுத் தேர்வுகள் சட்ட திருத்த மசோதா- 2026-க்கு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்துள்ளார்.

நாட்டில் கடந்த 12 ஆண்டுகளில் சிவில் விமானப் போக்குவரத்து துறை பிரமாண்ட வளர்ச்சி அடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தொன்மையான தமிழ் கலாச்சாராத்தை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் வென்ற வீரர்களுக்கு குடியரசு தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது NV/CN/VM.